DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.08/2025**

Prosecution **PW.3**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | சுரேஷ் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | அப்பாவு | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 41 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.05.2026.
2ம் எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம நத்தமேட்டில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜர், உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். (**பார்வைமகஜர், உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) 2 அல்லது 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் ஜெகதீஸ்வரன் கேஸ் கொடுத்திருந்தார் என்ற விவரம் தெரியும். நத்தமேட்டுக்கு பக்கத்தில் எனது தோட்டத்துக்கு செல்லும் வழியில் போலிசார் வந்து போலிசார் சம்பவத்தை பற்றி விசாரித்தார்கள். நான் சம்பவத்தை பார்க்கவில்லை என்று சொன்னேன். போலிசார் நாங்கள் வந்து சென்றதற்காக சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள் கையொப்பம் செய்தேன். என்னுடன் கார்த்திகேயன் என்பவர் கையெழுத்து செய்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் கையெழுத்து செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான் படம் வரைந்ததாக போலிசார் சொன்னார்கள்.

கையெழுத்து போட்ட இடத்தின் அருகில் எந்த வீடும் இல்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் நான் கையெழுத்து போடவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்றாலும் சரியல்ல நான் காவல்நிலையம் செய்யவில்லை. நான் சம்பவ இடத்தில் கையெழுத்து செய்திருந்தால் பக்கத்தில் வீடு இருப்பது எனக்கு தெரிந்திருக்கும் என்றால் இல்லை நான் சம்பவ இடத்தில் தான் போட்டேன் பக்கத்தில் வீடு இல்லை.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.25 11:41:25 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.